(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 55.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2016 பெப்புருவரி 26, வெள்ளிக்கிழமை, பி.ப. 1.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

77/ '15

1.

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.07.01 ஆம் திகதி முதல் இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள உணவுச் சுவையூட்டிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு சுவையூட்டிக்கும் தடைவிதிக்கப்படுவதற்கான காரணம் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தடைசெய்யப்பட்ட சுவையூட்டிகள் போன்றே அஜினமொட்டோ அல்லது மொனோசோடியம் க்ளூடமேட் (MSG) சுவையூட்டியும் மனித உடலுக்கு பாதகமானதென்பதையும்;

(ii) இது புற்றுநோய் மற்றும் நரம்பு நோய்கள் உள்ளிட்ட பாரதூரமான நோய்களுக்கு காரணமாக அமைகின்றதென்பதையும்;

(iii) ஒரு வருடத்தில் 2200 மெட்ரிக் தொன்னை விட அதிகளவில் மேற்படி சுவையூட்டி இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மொனோசோடியம் க்ளூடமேட் பாவனையை தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

228/ '15

2.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவை இந்நாட்டுக்கு பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்கூட்டிய பிரச்சார மற்றும் ஏனைய பணிகளுக்காக கடந்த அரசாங்கத்தின் இடையீட்டுடன் சேகரித்துள்ள பணம் எவ்வளவு;

(ii) மேற்படி பணம் முறையற்றவகையில் பாவிக்கப்பட்டுள்ளதா;

(iii) இந்த விளையாட்டு விழாவை இலங்கைக்கு பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் CWG Hambanthota 2018 (Pvt.) Ltd. எனும் கம்பனியொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததா;

(iv) இந்த கம்பனியின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு இலக்கம் யாது;

(v) அக்கம்பனிக்கு விளையாட்டுத்துறை அமைச்சினால் வழங்கப்பட்ட பணத்தொகை யாது;

(vi) அதற்கு மேலதிகமாக பணம் வழங்கிய ஏனைய நிறுவனங்கள் மற்றும் ஆட்களின் பெயர்கள் யாவை;

(vii) மேலே குறிப்பிடப்பட்டவர்களால் வழங்கப்பட்ட பணம் மற்றும் காசோலைகளின் பற்றுச்சீட்டுகள் அல்லது காசோலை இலக்கங்கள் தனித்தனியாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பணம் வங்கியிலிடப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக உள்ள ஆவணங்கள் யாவை;

(ii) வங்கியிலிடப்பட்டிராத பணக் கிடைப்பனவுகளை பற்றுச்சீட்டு இலக்கங்களுடன் சமர்ப்பிப்பாரா;

(iii) பணம் வங்கியிலிடப்படாமைக்கான காரணங்கள் யாவை; மேற்படி பணம் எவருடைய பொறுப்பில் உள்ளது;

(iv) சேகரிக்கப்பட்ட மொத்தப் பணத்தில் தற்போது கணக்கில் எஞ்சியுள்ள தொகை எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

289/ '15

3.

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் (வக்ப் பிரிவில்) பதிவுசெய்யப்பட்டுள்ள முஸ்லிம் பள்ளிவாசல்கள், ஜும்மா பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், சாவியாக்கள், தர்காக்கள் போன்ற அறக்கட்டளை நிறுவனங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துக்கள் சம்பந்தமான தரவுகள் அடங்கிய பதிவகமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பதிவகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மேற்படி பதிவகத்தின் தரவுத்தளத்தில் பதியப்பட்டுள்ள வக்ப் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கேற்ப யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வக்ப் சொத்துக்கள் பற்றிய தரவுத்தளமொன்று இல்லாவிடின், தரவுத்தளமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

300/ '15

4.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சனவரி மாதம் 09 ஆம் திகதியன்று உள்ளவாறு இலங்கைக்கு சொந்தமாகவிருந்த வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கத்தின் அளவு எத்தனை டொலர்கள் என்பதையும்;

(ii) 2015 நவெம்பர் மாதம் 26 ஆம் திகதியன்று உள்ளவாறு இலங்கைக்கு சொந்தமாகவிருந்த வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கத்தின் அளவு எத்தனை டொலர்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கம் இந்தளவிற்கு வேகமாக வீழ்ச்சியடைவதற்கு காரணம் யாதென்பதையும்;

(ii) வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கத்தை பாதுகாப்பதற்கும் அதிகரிக்கச் செய்வதற்கும் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

320/' 15

5.

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பதலே நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு நீர் பெற்றுக்கொள்ளப்படும் களனி கங்கையில் கடல் நீர் கலப்பதை தடுப்பதற்காக கொங்கிரீட் அணைக்கட்டொன்று அமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி கொங்கிரீட் அணைக்கட்டுக்கு 500 மீற்றர் கீழாக மணல் மூடைகளாலான அணைக்கட்டொன்று அமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மணல் மூடைகளாலான அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கு வருடாந்தம் கேள்விப்பத்திரம் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென ஆண்டொன்றுக்கு ஒதுக்கப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நிரந்தர கொங்கிரீட் அணைக்கட்டு இருக்கின்ற நிலையில், மணல் மூடைகளாலான அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கு வருடாந்தம் பெருமளவு பணத்தை செலவிடுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

321/ '15

6.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க தகவல் திணைக்களத்தில் விஷேட ஆராய்ச்சிப் பிரிவொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் கல்வித்தகைமைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டில் வடக்குப் பிரதேசம் சார்ந்ததாக 02 வெளிக்கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி ஆய்வுகளை, திணைக்களத்தின் விசேட ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ள முடியாமல் போனதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி 02 வெளிக்கள ஆய்வுகளையும் மேற்கொண்ட தனியார் நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி இரண்டு ஆய்வுகளுக்காகவும் மேற்படி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நிறுவனம் கேள்விப்பத்திரம் கோரப்பட்டதன் மூலம் தெரிவு செய்யப்பட்டதா என்பதையும்;

(vi) ஆமெனில், விண்ணப்பித்திருந்த ஏனைய நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் யாவை என்பதையும்;

(vii) விலை மனுக்களை கோருகின்றபோது மற்றும் மதிப்பீடு செய்கின்றபோது மேற்படி நிறுவனங்களின் ஆராய்ச்சியாளர்களின் தகைமைகள் மற்றும் நிறுவனங்களின் பூர்வாங்கத் தகைமைகள் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டதா என்பதையும்;

(viii) மேற்படி இரண்டு ஆய்வு அறிக்கைகளை அடிப்படையாக கொண்டு அரசாங்க தகவல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

345/ '15

7.

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ள மற்றும் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ள தோட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தோட்டங்கள் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தோட்டங்களில்,

(i) மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மண்சரிவு காரணமாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

ஒவ்வொரு தோட்டத்தின்படி தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

353/ '15

8\.
கௌரவ விஜித ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பளை கல்வி வலயத்துக்கு சொந்தமான, மாவத்துறை கிராமத்தில் அமைந்துள்ள, வெலிகங்க கனிஷ்ட பாடசாலை மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதென்பதையும்;

(ii) இப்பாடசாலை மலை உச்சியில் அமைந்துள்ளமையால், பாடசாலை மாணவர்கள் சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தை ஒரு நாளைக்கு இரு தடவைகள் நடந்து செல்ல வேண்டி நேர்ந்துள்ளதென்பதையும்;

(iii) பற்றைக் காடுகளைக் கொண்ட ஒரு பாழடைந்த வீதியில் சுடுகாட்டினையும் கடந்து செல்ல வேண்டி நேரிடுதல் போன்ற சிரமங்கள் காணப்படுகின்றமையின் காரணமாக, ஆசிரியர்கள்கூட இப் பாடசாலையில் சேவையாற்ற வருவதற்கு பின்வாங்குகிறார்கள் என்பதையும்;

(iv) இத்தகைய கஷ்ட நிலமைகளைத் தவிர்த்து, பாடசாலையை வேறொரு இடத்தில் அமைப்பதற்காக, பெருந்தோட்ட அமைச்சுக்கு சொந்தமான, கட்டிடமொன்றுடன் கூடிய ஒரு காணியை கல்வி அமைச்சு கொள்வனவு செய்துள்ளதென்பதையும்;

(v) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியும் கட்டடமும் உரித்தாகின்ற தோட்டத்தின், முகாமையாளரின் அழுத்தம் காரணமாக புதிய கட்டடத்தில் இப்பாடசாலையை ஆரம்பித்தல் தடைப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் நன்மை கருதி இந்தப் பாடசாலையை மூடுவதற்கு இடமளிக்காது, மேலே (அ)(v) இல் குறிப்பிடப்பட்டுள்ள அழுத்தங்களையும் தடுத்து, இதனை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், இதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

362/ ' 15

9\.
கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்களின் மூலம் அமுல்படுத்தப்பட்ட பிரதானமான வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களில் வெளிநாட்டு நிதியங்கள் மற்றும் உள்நாட்டு நிதியங்கள் மூலம் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்த கருத்திட்டங்களைக் கண்காணிப்பதற்காக கருத்திட்ட ஒப்படைப்பு அடிப்படையில் ஆலோசகர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆலோசகர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி ஆலோசகர்களுக்கு இருக்க வேண்டிய தொழில்சார் மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) இவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்த சம்பளம் மற்றும் வேறு கொடுப்பனவுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) மேற்படி சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக அரசாங்கத்தினால் வருடாந்தம் செலவிடப்பட்ட மொத்தத் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

81/ ’15

10.

கௌரவ புத்திக பத்திறண,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கும் இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கும் சொந்தமான தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலை களின் பெயர்கள், அமைந்துள்ள பிரதேசங்கள் மற்றும் பயிரிடப்பட்டுள்ள பயிர் வகைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தோட்டம் மற்றும் தொழிற்சாலையைச் சார்ந்ததாக சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கடந்த 5 ஆண்டுகளினுள் மேற்படி தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இலாபம் ஈட்டிய மற்றும் நட்டம் அடைந்த தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி காலகட்டத்தில் மேற்படி ஒவ்வொரு தோட்டமும் அல்லது தொழிற்சாலையும் பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) நட்டமடைந்த அரச தோட்டங்களுக்கு திறைசேரியிலிருந்து பணம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், வழங்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணம் வழங்கப்பட்ட தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகள் யாவையென்பதையும்;

(iv) நட்டமடைகின்ற அரச தோட்டங்களை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

238/ ’15

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான GB-2865 இலக்கத்தைக் கொண்ட டிபெண்டர் வாகனத்தை 03 மாத குறுகிய கால பாவனைக்காக பெற்றுக்கொண்ட முன்னாள் அமைச்சரொருவரும் இன்னொரு முன்னாள் அமைச்சரும் 06 ஆண்டுகள் அனுமதியின்றி பயன்படுத்திவிட்டு பின்னர் அதன் நான்கு சக்கரங்கள் உட்பட பல பாகங்களை அகற்றிய நிலையில், வாகன அடிச் சட்டத்தை மாத்திரம் கடந்த 2015 ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலின் பின்னர் முன்னறிவிப்பின்றி, இடர் உதவி வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்து அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் வளவில் கைவிட்டுச் சென்றுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் உத்தியோகபூர்வ ரீதியில் GB-2865 இலக்கத்தைக் கொண்ட டிபெண்டர் வாகனம் வழங்கப்பட்டிருந்த அமைச்சரின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி வாகனம் அனுமதியின்றி எவ்வளவு காலம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இது தொடர்பாக நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி வாகனத்தின் பாகங்கள் அகற்றப்பட்டதால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நட்டத்தை அறவிடுவதற்கு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(vi) மேற்படி அரச சொத்தின் குற்றவியல் கையாடல் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(vii) இது தொடர்பாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

296/ '15

12.

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில், மெததும்பர பிரதேச சபை மூலம் 'புரநெகும' கருத்திட்டத்தின் கீழ் வியாபாரிகளுக்கான வர்த்தக அங்காடி ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வர்த்தக அங்காடியின் விற்பனை நிலையங்களை வழங்கும் பொருட்டு பின்பற்றப்படுகின்ற நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அன்று இலங்கை மகாவலி அதிகார சபைக்கும், இன்று பிரதேச சபைக்கும் வரி செலுத்தி நடைபாதை வியாபாரிகளாக புடவை விற்பனையில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு பாரிய அநீதி ஏற்பட்டுள்ளதால், குறித்த விற்பனை நிலையங்களை வழங்கும் போது உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 மற்றும் 5 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள அறிவுரைகளை கவனத்தில் கொள்ள ஆலோசனை வழங்குவாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

301/ ’15

13.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலக சந்தையிலிருந்து மசகு எண்ணெய் கொள்வனவு செய்யப்பட்ட நாள் தொடக்கம் உள்நாட்டு சந்தையில் நுகர்வோருக்கு விற்கப்படும் வரை செலவாகும் காலம் எவ்வளவு;

(ii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் 2014 நவெம்பர் மாதத்திலும் 2015 ஆகஸ்ட் மாதத்திலும் மசகு எண்ணெய் கொள்வனவு செய்யப்பட்ட மாதாந்த சராசரி விலை எவ்வளவு;

(iii) உலக சந்தையிலிருந்து பெற்றோல் கொள்வனவு செய்யப்பட்ட நாள் தொடக்கம் உள்நாட்டு சந்தையில் நுகர்வோருக்கு விற்கப்படும் வரை செலவாகும் காலம் எவ்வளவு;

(iv) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் 2014 திசெம்பர் மாதத்திலும் 2015 செத்தெம்பர் மாதத்திலும் பெற்றோல் கொள்வனவு செய்யப்பட்ட மாதாந்த சராசரி விலை எவ்வளவு;

(v) 2015 சனவரி 09 ஆம் திகதி மற்றும் 2015 ஒற்றோபர் 09 ஆம் திகதியில் இலங்கையில் ஒரு லீற்றர் பெற்றோலின் சில்லறை விலை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) உலக சந்தையில் பெற்றோலிய விலை வீழ்ச்சியடைவதன் நன்மை நுகர் வோருக்கு வழங்கப்படாதது ஏனென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

325/ '15

14.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையினுள் வாகனங்களுக்கு புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களை வழங்கும் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களை வழங்குவதற்கான அதிகாரம் பெற்ற நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி நிறுவனங்கள் புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களை எந்த ஆண்டிலிருந்து வழங்குகின்றன;

(iv) புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களை வழங்கத் தொடங்கிய வருடம் முதல் ஒவ்வொரு நிறுவனமும் உழைத்த வருமானம் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(v) ஒவ்வொரு வாகனத் தொகுதிக்கும் ஏற்ப புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களை வழங்குகையில் அறவிடப்படும் கட்டணங்கள் யாவை;

(vi) மேற்படி நிறுவனங்கள் புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களுக்காக அரசாங்கத்துக்கு செலுத்தும் பணத்தொகை ஒவ்வொரு வாகனத் தொகுதிக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(vii) மேற்படி நிறுவனங்கள் புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களை வழங்குவதற்கு ஆரம்பித்த வருடம் முதல் அரசாங்கத்துக்கு செலுத்தியுள்ள பணத்தொகை ஒவ்வொரு நிறுவனத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(viii) மேற்படி நிறுவனங்கள் அரசாங்கத்துக்கு நிலுவைப் பணத் தொகைகளை செலுத்த வேண்டியுள்ளனவா;

(ix) ஆமெனில், குறித்த நிலுவைப் பணத்தொகை ஒவ்வொரு நிறுவனத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(x) மேற்படி நிறுவனங்களின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மற்றும் அவர்களது விலாசங்கள் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

346/ ’15

15.

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுநலவாய அரசுத் தலைவர்களின் மாநாட்டு (CHOGM) க்கு இணையாக சூரியவெவ பிரதேசத்தில் டென்னிஸ் மைதானமொன்றை அமைக்க திட்டமிடப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென தெரிவுசெய்யப்பட்ட காணியின் உரிமையாளர் யார் என்பதையும்;

(iii) மேற்படி காணிக்கென இதுவரை செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு ஒரு தனியாருக்குச் சொந்தமான காணிக்கு எந்த அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(v) மேற்படி காணிக்கான விலைமதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(vi) மேற்படி டென்னிஸ் மைதான நிர்மாணப் பணிகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(vii) அதன் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(viii) இன்றேல், செலுத்தப்பட்ட பணத்தை மீளப்பெற நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 2015.10.06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— அரசாங்க கணக்குகள் பற்றிய குழு,— 125 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும், 2015 நவம்பர் 04 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் இருபத்தாறு (26) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பொது முயற்சிகள் பற்றிய குழு,— 126 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும், 2015 நவம்பர் 04 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் பொது முயற்சிகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் இருபத்தாறு (26) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பொது மனுக்கள் பற்றிய குழு,— 128 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும், 2015 நவம்பர் 04 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் பொது மனுக்கள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் இருபதிரெண்டு (22) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— உயர் பதவிகள் பற்றிய குழு,— 128 (அ) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளினாலும், 2015 ஒற்றோபர் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், உயர் பதவிகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் பதினைந்து (15) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

அரசியலமைப்புச் சபையை நியமிப்பதற்கான தீர்மானம்,— ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 சனவரி 09),— "இலங்கைக்கு புதிய அரசியலமைப்பொன்றை வகுத்தல் அவசியமென இலங்கை மக்கள் மத்தியில் பரந்தளவில் இணக்கப்பாடு காணப்படுவதாலும்;

2015, சனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதி தேர்தலின் போது மக்கள் சட்ட ஒழுங்குக்கு மதிப்பளித்து சனநாயகத்தை வலுப்படுத்தும் அரசியல் கலாசாரமொன்றை தாபிப்பதற்கு தெளிவான மக்கள் ஆணை மக்களால் வழங்கப்பட்டுள்ளதாலும்;

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன, புதிய அரசியலமைப்பை சட்டவாக்கம் செய்து, மற்றும் பலவற்றுடன் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறைமையை ஒழிப்பதன் மூலம் மேற்கூறப்பட்ட சனாதிபதித் தேர்தலின் போது வெளிப்படுத்தப்பட்ட மக்களின் விருப்புக்கு வலுவூட்டுவதற்கான தனது அபிலாசையினைத் தெளிவாகக் கூறியுள்ளதாலும்;

மேலும் பல்வேறு விடயங்களுடன் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறைமையை ஒழித்து, விருப்பு வாக்கு முறைமையை நீக்கி நியாயமான பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையை உறுதிப்படுத்தி, அனைத்து பிரஜைகளினதும் சனநாயக உரிமைகளை பலப்படுத்தி, தேசிய பிரச்சினைக்கு அரசியலமைப்பு ரீதியான தீர்வொன்றை வழங்கக் கூடிய, தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்தி சட்ட விதியை மதிக்கும் அரசியல் கலாசாரமொன்றை தாபிக்கக் கூடிய, மனித கௌரவத்தை உறுதிப்படுத்தும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் சுயாதீனத்தன்மைக்கும் உத்தரவாதம் அளித்து பொறுப்புமிக்கதும் வகைகூறக் கூடியமதுமான அரசாங்கமொன்றை மேம்படுத்தும் புதிய அரசியலமைப்பொன்றை சட்டவாக்கம் செய்தல் அவசியமாகின்றதனாலும்;

1. இலங்கையின் புதிய அரசியலமைப்பு பற்றிய மக்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்று அவற்றைப் பற்றிக் கலந்தாராய்ந்து அரசியலமைப்பின் 75ஆவது உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அதன் பரிசீலனைக்காக அரசியலமைப்பு சட்டமூலத்தின் வரைவைத் தயாரிக்கும் நோக்கத்துக்காக இதனகத்து இதன் பின்னர் 'அரசியலமைப்புச் சபை' என அழைக்கப்படும் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய பாராளுமன்றக் குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர் அரசியலமைப்பு சபையின் தவிசாளராக இருப்பார். அரசியலமைப்பு சபை ஏழு (7) பிரதித் தவிசாளர்களைக் கொண்டதாக இருக்கும் என்பதுடன் அவர்கள் அரசியலமைப்பு சபையினால் தெரிவுசெய்யப் படுதலும் வேண்டும்.

   கௌரவ சபாநாயகர் இல்லாத சந்தர்ப்பங்களில், சபைக்கூட்டங்களின் அமர்வுக்குத் தலைமை வகிப்பதற்கு அரசியலமைப்பு சபையின் பிரதித் தவிசாளர்களுக்கிடையே ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

3. அரசியலமைப்பு சபையின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் இருபது (20) ஆக இருத்தல் வேண்டும்.

4. (அ) அரசியலமைப்பு சபைக்கான அரசியலமைப்பு சார்ந்த ஆலோசகர்களையும்;

   (ஆ) அரசியலமைப்பு சபைக்கான ஒரு சட்டத்துறைசார் செயலாளரையும் அத்தகைய சட்டத்துறைசார் செயலாளரின் உதவியாளர்களையும்;

   (இ) அரசியலமைப்பு சபையினதும் வாசகம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள குழுக்களினதும் நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் நோக்கத்துக்காக அரசியலமைப்பு சபையின் பணியாளர்களையும்; மற்றும்

   (ஈ) அரசியலமைப்பு சபையின் (சமூக ஊடகங்களை உள்ளடக்கிய) ஊடக பணியாளர்களையும் அரசியலமைப்பு சபை கொண்டிருத்தல் வேண்டும்.

ஊடகப் பணியாளர்கள் இணையத்தளம் ஒன்றை நிறுவிப் பேணுவதுடன் இலங்கையின் புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை முறைக்கு தகுந்த விளம்பரம் வழங்குவதற்குப் பொருத்தமான ஏனைய ஊடகங்களைப் பயன்படுத்துதலும் வேண்டும்.

அரசியலமைப்புச் சபையினதும் அதன் குழுக்களினதும் நடவடிக்கைகளும் அவ்வாறே, பொதுமக்களின் கருத்துக்களும் / சமர்ப்பிப்புகளும் ஆவணப்படுத்தப் படுவதையும் அத்தகைய வேறு தொடர்பான நிபுணத்துவ அல்லது தொழில்நுட்ப அபிப்பிராயங்களுடன் அத்தகைய இணையத்தளங்களில் பிரசுரிக்கப்படுவதையும் ஊடகப் பணியாளர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. அரசியலமைப்பு சபை பின்வரும் உப குழுக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) பிரதம அமைச்சர் (தவிசாளர்), பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், நீதி அமைச்சர், மற்றும் அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்படுகின்ற அரசியலமைப்பு சபையின் ஏனைய உறுப்பினர்கள் பதினேழு (17) பேரை விஞ்சாத எண்ணிக்கையைக் கொண்டதொரு வழிப்படுத்தும் குழு.

வழிப்படுத்தும் குழு அரசியலமைப்பு சபையின் அலுவல்கள் மற்றும் இலங்கையின் புதிய அரசியலமைப்பை வரையும் பணி ஆகியவற்றுக்கான பொறுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்படக்கூடிய அரசியலமைப்பு சபையின் உறுப்பினர்களைக் கொண்ட அத்தகைய ஏனைய உபகுழுக்கள்.

ஆயின், ஒவ்வொரு உப குழுவும் பதினொரு (11) பேரை விஞ்சாதவாறு உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு உப குழுவினதும் தவிசாளர் வழிப்படுத்தும் குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

6. அரசியலமைப்பு சபை அதன் முதலாவது அமர்வின்போது:—

(அ) பிரதித் தவிசாளர்களைத் தெரிவுசெய்தலும்;

(ஆ) வாசகம் 5 (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களைத் தீர்மானித்தலும்; அத்துடன்

(இ) வாசகம் (5) இல் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் வேண்டும்.

7. அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பிப்பதற்கு முன்னர், அரசியலமைப்பு சபையின் பரிசீலனைக்காக அரசியலமைப்பின் வரைவொன்றை பிரேரிக்கும் தீர்மானத்தை சமர்ப்பிக்குமாறு வழிப்படுத்தும் குழுவைக் கோரும் அரசியலமைப்பு சபை மேற்கொள்ளவேண்டிய தீர்மானத்தை பிரதம அமைச்சர் அரசியலமைப்பு சபையின் முதலாவது கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. அரசியலமைப்பு சபை அதன் அமர்வுகளை பாராளுமன்றச் சபையில் நடாத்துவதற்கு இத்தால் அதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றது:

ஆயினும், மேல் மாகாணத்திற்கு வெளியே ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் அதன் கூட்டங்களை நடத்துவதற்கு அரசியலமைப்பு சபை தீர்மானிக்கலாம்:

ஆயின், மேலும் பத்திரங்களைச் சமர்ப்பித்தல், தீர்மானங்களைப் பிரேரித்தல் மற்றும் வாக்களிப்பு ஆகியவை பாராளுமன்றச் சபையிலேயே இடம்பெறுதல் வேண்டும்.

9. அரசியலமைப்பு சபையின் அல்லது ஏதேனும் அதன் குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான சேவைகளுக்காக எந்தவொரு நிறுவனத்தின் சேவைகளையும் வழிப்படுத்தும் குழு கோரலாம்.

10. அரசியலமைப்புச் சபைக்கு அத்துடன் / அல்லது அதன் பல்வேறு உபகுழுக்களுக்கு உதவுவதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் ஏனைய நிபுணர்களை வழிப்படுத்தும் குழு நியமிக்கலாம்.

11. அரசியலமைப்பு சபையின் நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு திறந்ததாக இருத்தல் வேண்டும். அரசியலமைப்பு சபையினதும் அதன் உப குழுக்களினதும் நடவடிக்கைகள் ஆவணப்படுத்தப்பட்டு உடனடியாக வெளியிடப்படுதலும் வேண்டும். பொருத்தமானவிடத்து, அரசியலமைப்பு சபையின் அத்துடன்/ அல்லது அதன் உப குழுக்களின் நடவடிக்கைகளை ஒலிபரப்பு/ஒளிபரப்பு செய்வதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசியலமைப்புச் சபை மேற்கொள்ளுதல் வேண்டும்.

 சந்தேகங்களை நீக்குவதற்காக, மேலே சொல்லப்பட்ட விடயங்களை வெளியிடுவதற்கு பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பிரிவு 17இன் பிரகாரம் பாராளுமன்றத்தின் விசேட அனுமதி குறிப்பாக வழங்கப்படுதல் வேண்டும் என இத்தால் குறிப்பாகத் தீர்மானிக்கப்படுகின்றது.

 சந்தேகங்களை நீக்குவதற்காக, அரசியலமைப்பு சபையினதும் வாசகம் 5இல் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களின் நடவடிக்கைகள் ஏக காலத்தில் பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுவதுடன் இத்தால் குறிப்பாக அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய நடவடிக்கைகளின் வெளியீடு பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பிரகாரம் தவறொன்றாக அமையாது எனவும் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

12. கலந்தாலோசிப்பதற்காக அத்துடன் / அல்லது விடயங்களை முன்வைப்பதற்காக எந்தவொரு ஆளையும் அரசியலமைப்பு சபையின் முன் வரவழைப்பதற்கான தத்துவத்தை அரசியலமைப்பு சபை கொண்டுள்ளது.

13. கலந்தாலோசிப்பதற்காக அத்துடன் / அல்லது விடயங்களை முன்வைப்பதற்காக அத்துடன் / அல்லது பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழுவின் முடிவுகளை அறிக்கை செய்வதற்காக பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழுவின் எவரேனும் உறுப்பினரை வரவழைப்பதற்கான தத்துவத்தையும் அரசியலமைப்பு சபை கொண்டுள்ளது.

14. இது தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமைவாக, அரசியலமைப்பு சபையின் அலுவல்களை நடத்துவதில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளையும் உபாயங்களையும் தீர்மானிப்பதற்கு அதற்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகின்றது:

 ஆயின், வழிப்படுத்தும் குழுவின் உடன்பாட்டுடன் பிரதம அமைச்சரால் பிரேரிக்கப்படும் தீர்மானத்தைப் பின்பற்றி அத்தகைய தீர்மானம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்:

 பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளில் இதற்கு முரணாக எவ்வாறிருப்பினும், அரசியலமைப்பு சபையினதும் அதன் உப குழுக்களினதும் நடவடிக்கைமுறை விதிகள் இந்தத் தீர்மானத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.

15. அரசியலமைப்பு சபையின் அலுவல்கள் பற்றிய அறிவித்தல் பிரதம அமைச்சரினால் அல்லது அது பற்றிய வழிப்படுத்தும் குழுவின் அங்கீகாரத்துடன், பிரதம அமைச்சரினால் அத்தகைய நோக்கத்துக்காக காலத்துக்குக் காலம் நியமிக்கப்படும் அமைச்சரவையின் அத்தகைய அமைச்சரினால் வழங்கப்படுதல் வேண்டும்.

16. வாசகம் 5(ஆ)வில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்கள் அத்தகைய ஒவ்வொரு உப குழுவும் நியமிக்கப்பட்டு பத்து (10) வாரங்களினுள் வழிப்படுத்தும் குழுவுக்கு தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. வாசகம் 5(ஆ)வின் கீழ் நியமிக்கப்பட்ட உப குழுக்களின் அறிக்கைகளையும் பொதுமக்கள் பிதிநிதித்துவக் குழுவின் அறிக்கையையும் பரிசீலித்ததன் மீதாக, வழிப்படுத்தும் குழு அரசியலமைப்பு சபைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கை அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

18. அரசியலமைப்பு சபை அதன் பின்னர் அறிக்கையினதும் அரசியலமைப்பு வரைவினதும் (ஏற்புடையதாயின்) பொதுவான அனுகூலங்கள் மற்றும் கோட்பாடுகள் பற்றி விவாதிப்பதுடன் உத்தேச திருத்தங்கள் பற்றியும் விவாதிக்கலாம். அத்தகைய விவாதத்தின் இறுதியில், "இறுதி அறிக்கை ஒன்றையும் அரசியலமைப்பு வரைவு பற்றிய தீர்மானத்தையும் சமர்ப்பிக்குமாறு வழிப்படுத்தும் குழு கோரப்படுமாக" என்னும் வினா அக்கிராசனத்தினால் அரசியலமைப்புச் சபைக்கு விடப்படும்.

19. அதன் பின்னர், வழிப்படுத்தும் குழு, விவாதத்தின்போது முன்மொழியப்பட்ட திருத்தங்களை, ஏதேனும் இருப்பின், பரிசீலித்து அரசியலமைப்பு சபையின் பரிசீலனைக்கு இறுதி அறிக்கை ஒன்றையும் அரசியலமைப்பு வரைவை உள்ளடக்கிய தீர்மானத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய இறுதி அறிக்கையும் அரசியலமைப்பு வரைவை உள்ளடக்கிய தீர்மானமும் அரசியலமைப்பு சபையினால் அங்கீகரிக்கப்படுமாக என பிரதம அமைச்சர் பிரேரித்தல் வேண்டும்.

20. 18 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவாதத்தின் போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்:—

தவிசாளரால் அல்லது தவிசாளர் வருகை தந்திராத சந்தர்ப்பத்தில் எவரேனும் பிரதித் தவிசாளரால் ஒவ்வொரு வாசகத்தினதும் இலக்கம் வரிசைக் கிரமப்படி வாசிக்கப்படல் வேண்டும்.

(i) வாசகமொன்றுக்கு ஏதேனும் திருத்தத்தை மேற்கொள்ளலாம் அல்லது வாசகங்கள் நீக்கப்படலாம் அல்லது புதிய வாசகங்கள் சேர்க்கப்படலாம்.

(ii) விவாதத்தின் இந்தக் கட்டத்தின் போது அரசியலமைப்பு வரைவின் விபரங்கள் அன்றி அதன் கோட்பாடுகள் பற்றி கலந்துரையாடலாகாது.

(iii) அரசியலமைப்பு வரைவின் ஏதேனும் முன்னைய பகுதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்புடையதல்லாத திருத்தங்களைப் பிரேரிக்க முடியாது.

(iv) அரசியலமைப்பு வரைவின் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னரும் வரைவு தொடர்பான விவாதம் நிறைவு செய்யப்படுவதற்கு முன்னரும் எவரேனுமொரு உறுப்பினர் தவிசாளரின் அனுமதியின் பேரில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட வாசகத்துக்கு திருத்தமொன்றைப் பிரேரிக்கலாம்.

(v) வாசகம் ஒன்றுக்கான திருத்தம் பற்றிய வினா முழுமையாக அக்கிராசனத்தினால் பிரேரிக்கப்படாதவிடத்து, வாசகமொன்று பிற்போடப்படலாம்.

(vi) அரசியலமைப்பு வரைவின் மீதி வாசகங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னரும் புதிய வாசகங்கள் கொண்டு வரப்படுவதற்கு முன்னரும் பிற்போடப்பட்ட வாசகங்கள் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(vii) அரசியலமைப்பு வரைவின் அட்டவணைகளை பரிசீலனை செய்யப்படுவதற்கு முன்னர் புதிய வாசகங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதோடு அதனை முதலாவது மதிப்பீடாக கருதுதல் வேண்டும். இதன் தொடரும் வினாக்கள் "வாசகம் இரண்டாம் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்" மற்றும் "வாசகம் (அல்லது திருத்தப்பட்டதற்கு அமைவான வாசகம்) அரசியலமைப்பு வரைவில் சேர்க்கப்படும்" என்பனவாகும்.

(viii) அரசியலமைப்பு வரைவின் அட்டவணைகள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் புதிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படலாம் என்பதுடன் இவை புதிய வாசகங்களாகவே கருதப்படல் வேண்டும்.

(ix) எல்லா வாசகங்களும் அட்டவணைகளும் அத்துடன் பிரேரிக்கப்பட்ட புதிய வாசகம் அல்லது அட்டவணைகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், முகவுரை, ஏதேனும் ஒன்று இருப்பின், அது பரிசீலிக்கப்பட்டு 'இது அரசியலமைப்பு வரைவின் முகவுரையாக இருக்குமாக' என்ற வினாவை விடுத்தல் வேண்டும்.

(x) அரசியலமைப்பு வரைவின் பெயரில் ஏதேனும் திருத்தங்கள் அவசியப்படின் மேலே விபரிக்கப்பட்ட நடைமுறைகளின் இறுதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

21. பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளைகள் 42, 43 மற்றும் 44இன் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அரசியலமைப்புச் சபையின் நடைமுறைகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

22. அரசியலமைப்புச் சபையின் மூன்றில் இரண்டு பங்கினர் அரசியலமைப்பு வரைவு தொடர்பான தீர்மானத்தை அங்கீகரிக்காதவிடத்து இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்புச் சபையும் குழுக்களும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

23. அரசியலமைப்புச் சபை அரசியலமைப்பு வரைவு பற்றிய தீர்மானத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் அங்கீகரிக்குமிடத்து அறிக்கையும் மற்றும் அரசியலமைப்பு வரைவும் வழிப்படுத்தும் குழுவினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்பு சபையும் உப குழுக்களும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

24. அத்தகைய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை அரசியலமைப்பின் 75(ஆ) மற்றும் 120(ஆ) ஆகிய உறுப்புரைகளின் பிரகாரம் அரசியலமைப்பை முற்றுமுழுதாக நீக்கி பதிலீடு செய்வதற்கான சட்டமூலமாக அமைச்சரவை சான்றுபடுத்துவதோடு அத்தகைய சட்டமூலம் அரசியலமைப்பின் 83ஆம் உறுப்புரையில் தேவைப்படுத்தப்படும் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு கருதப்பட்டு மக்கள் தீர்ப்புக்காக மக்களிடம் சமர்ப்பிக்கப்படும்.

25. இதனை அடுத்து அரசியலமைப்பின் உறுப்புரை 78(1) இன் பிரகாரம் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

26. அதன் பின்னர், சனாதிபதி அரசியலமைப்பின் உறுப்புரை 154எ(2)இன் பிரகாரம் சட்டமூலத்தை ஒவ்வொரு மாகாண சபைகளின் கருத்துகளையும் பெற்றுக் கொள்வதற்காக அத்தகைய அனைத்து சபைகளுக்கும் ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

27. இதன் பின்னர் பிரதம அமைச்சர் அத்தகைய சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதுடன் அத்தகைய சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

28. மேல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தகைய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் அரசியலமைப்பின் 83ஆவது உறுப்புரையின் பிரகாரம் விசேட பெரும்பான்மையினால் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுமாக என பிரதம அமைச்சர் பிரேரிக்க வேண்டும்.

மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாத உறுப்பினர்கள் கூறப்பட்ட சட்டமூலத்துக்குச் சார்பாக வாக்களிக்குமிடத்து, சட்டமூலம் விசேட பெரும்பான்மையினால் பாராளுமன்றத்தினால் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது என சபாநாயகர் அரசியலமைப்பின் 79ஆவது உறுப்புரைக்கு அமைய தகுந்தவாறு சான்றுப்படுத்துவதுடன் இலங்கையின் இறைமை உரித்தாக்கப்பட்டுள்ள மக்களினால் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படும் வரை, சட்டமூலம் சட்டமாகாது.

29. இதன் பின்னர் அரசியலமைப்பின் 85(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் மக்களால் அங்கீகரிப்பதற்காக சனாதிபதியினால் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

30. சட்டமூலம் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுமிடத்து, அரசியலமைப்பின் 80(2)ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியினால் சட்டமூலம் சான்றுப்படுத்தப்பட்டதன் பின் சட்டமூலம் சட்டமாக மாறும்.

31. அரசியலமைப்புச் சபை மற்றும், 5ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்கள் மற்றும் இந்த தீர்மானத்துக்கு அமைவாக நியமிக்கப்பட்டுள்ள பணியாளர் மற்றும் ஆலோசகர்களுக்கான செலவினங்கள் திரட்டு நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அரசியலமைப்பின் 150ஆவது உறுப்புரையின் பிரகாரம் அவ்விடயம் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளைப் பாராளுமன்றம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

32. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, அரசியலமைப்புச் சபையினால் பிரேரிக்கப்பட்டவாறு இவ்வாறான அரசியலமைப்புச் சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நிராகரித்தல் அல்லது திருத்தத்துக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளுதல் பாராளுமன்றத்தின் பொறுப்பாக இருக்க வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

33. சந்தேகங்களைத் தவிர்பதற்காக, சமுகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு விசேட பெரும்பான்மையினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, பின்னர் அரசியலமைப்பின் 83ஆவது உறுப்புரையில் தேவைப்படுத்தப்பட்டவாறு மக்கள் தீர்ப்பொன்றின் போது மக்களினால் அங்கீகரிக்கப்படுமிடத்து மாத்திரம் அரசியலமைப்பு சட்டமூலம் சட்டமாக்கப்படுதல் வேண்டுமென இத்தால் மேலும் தெரிவிக்கப்படுகின்றது."எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 2.

வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

வேலையாளர்களின் வரவுசெலவுத் திட்ட நிவாரணப்படி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

நுண்நிதியளிப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஒகத்து மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— தேசிய அரசுப் பேரவையின் விளையாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 31 ஆம் மற்றும் 41 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சினால் ஆக்கப்பட்டு, 2013 சனவரி மாதம் 15 ஆம் திகதிய, 1793/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கத்தின் ஒழுங்கிதகள் கொண்ட 13 மற்றும் 17 ஆம் பிரிவுகள் திருத்தப்பட்டு 2015 நவம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1940/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 நவெம்பர் 20 ஆந் திகதிய 1941/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 03 (இ) ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 நவெம்பர் 20 ஆந் திகதிய 1941/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 சனவரி 12 ஆந் திகதிய 1949/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( அத்தியாயம் 52) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 நவெம்பர் 20 ஆம் திகதிய 1941/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 978, 979, 980)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( அத்தியாயம் 52 ) 22 ஆம் பிரிவின் ( 1 ) ஆம் உப பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 04 ஆம் திகதிய 1943/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 981)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட செய்யப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52 ) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ், மதுபானங்களின் செறிவின் அளவு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 15 ஆம் திகதிய 1945/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 982)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ், வருடாந்த உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 15 ஆம் திகதிய 1945/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 983, 984)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.5),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( அத்தியாயம் 52) 4 ஆம் மற்றும் 13 ஆம் பிரிவுகளின் கீழ், வெளிநாட்டு மதுபானம் விநியோகம் மற்றும் இடப்பெயர்வு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆம் திகதிய 1947/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 985)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.6),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( அத்தியாயம் 52) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ், ஹோட்டல்களில் மதுசாரப் பாவனையுடன் தொடர்புபட்ட கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆம் திகதிய 1947/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 986)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.7),— காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( அத்தியாயம் 52) 22 ஆம் பிரிவின் ( 1 ) ஆம் உப பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆம் திகதிய 1947/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 987)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 26 ஆவது பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டணம் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டணம் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2016 சனவரி 01 ஆம் திகதிய 1947/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரினால், செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்ட 2015 ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆம் திகதிய 1941/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரினால், செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்ட 2015 ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆம் திகதிய 1941/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரினால், செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்ட 2015 ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆம் திகதிய 1944/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 24.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 25.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 26.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.